செல்லத்துரை சுவாமிகள், கவிஞர் இ. முருகையன், பண்டிதர் பொன் இராமுப்பிள்ளை போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். சிவசங்கர பண்டிதரின் சைவத் தமிழ் பணியினை விதந்துரைக்கும் வகையில் 1954ஆம் ஆண்டு சிவசங்கர பண்டிதர் ஞாபகார்த்த சபை அமைக்கப்பட்டது. மேலும் சிவசங்கர பண்டிதர் நூல் நிலையம் இன்று வரை சிறப்பாக இயங்கி வருகின்றமை போற்றுதற்குரியது. கு.சிற்சபேசன் அவர்கள் அரசகேசரியான் திருவூஞ்சல், ஸ்ரீ வாலாம்பிகை சமேத வைதீஸ்வரர் ஊஞ்சற் பதிகம், அரசகேசரியான் தோத்திரப் பாமாலை, நீர்வை நாட்டுவளம், நீர்வைச் சிலேடை வெண்பா முதலிய நூல்களை எழுதியுள்ளார். பீதாம்பரப்புலவரால் நீர்வை வெண்பாவும் நீ.சி.முருகேசு அவர்களால் நீர்வைக்கந்தன் புகழ்மாலையும் பாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நீர்வையூரின் இந்துப் பண்பாட்டினை வளர்த்தெடுக்கும் பணியில் கல்வி நிறுவனங்கள், சமய நிறுவனங்கள், சமூக நிறுவனங்கள் என்பன அளப்பெரும் பணியாற்றி வருகின்றன. நீர்வேலியில் 1850ஆம் ஆண்டளவில் ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட திண்ணைப் பள்ளிக்கூடம் 1880ஆம் ஆண்டளவில் சிவப்பிரகாச பண்டிதரால் 'சைவப்பிரகாச வித்தியாசாலை' எனும் பெயருடன் நிர்வகிக்கப்பட்டது. பின்னர் நடராச பண்டிதரது காலத்தில் பொருளாதார வளம் இன்மையினால் பாடசாலையை விற்கமுற்பட்டவேளை கிறிஸ்தவர்களின் கைகளில் சிக்கிவிடாது தடுத்து அதனை விலைக்கு வாங்கிய முதலியார் அத்தியார் அருணாச்சலம் அவர்கள் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி எனும் பெயரிட்டு சிறப்புற நடாத்தினார். இவ்வகையில் அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி சி.சி.த.க பாடசாலை, நீர்வேலி தெற்கு இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலை, நீர்வேலி றோ.க.த.க பாடசாலை, கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம் என்பவற்றின் பங்கு மகத்தானது. 1940 காலப்பகுதிகளில் இந்துப் பண்பாட்டினை பேணிக்காக்கும் வகையில் நீர்வேலி இந்து இளைஞர் சங்கம் ஆற்றிய பணியினை நவாலியூர் சோமசுந்தரப் புலவர் பாராட்டியுள்ளார். மேலும் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை மடம், நீர்வேலி கந்தசுவாமி கோயில் இந்து சமய அபிவிருத்திச் சங்கம், நீர்வேலி ஸ்ரீகணேசா அறநெறிப்பாடசாலை, நீர்வேலி காமாட்சியம்பாள் அறநெறிப்பாடசாலை, ஸ்ரீ முருகன் அறநெறிப்பாடசாலை, காமாட்சி அம்பாள் இந்து பரிபாலன சபை என்பவற்றின் பங்களிப்பு போற்றுதற்குரியது. சனசமூக நிலையங்கள், நலன்புரி நிலையங்கள், கருணாலயம் போன்ற சமூக நிறுவனங்களும் இந்துப் பண்பாட்டு வளர்ச்சிக்கு உறுதுணை புரிகின்றன. ஆதரிப்பாரின்றித் தவிக்கும் சிறுவர்களுக்கு அரவணைப்பு வழங்கும் நிலையமாக கருணாலயம் விளங்குகின்றது. கனடா, ஐக்கிய இராச்சியம், சுவிஸ் நலன்புரி நிலையங்கள் நீர்வையின் புகழை மேலை நாடுகளிலும் செழித்தோங்கச் செய்கின்றன.

நீர்வையின் இந்துப்பண்பாட்டு வளர்ச்சியில் கிராமியக்கலைகளும் முதன்மை வகிக்கின்றன. கிராம மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் ஆற்றல் இக்கலைகளுக்கு உண்டு. வசந்தன் கூத்து இவ்வூரில் பிரபல்யம் பெற்றுள்ளது. கண்ணகி மதுரையை எரித்தும் சினம் தணியாது கோபம் கொண்டு வருகையில் அம்மனை மகிழ்விக்க சிறுவர்கள் ஆடிய கூத்து இது என்பது ஐதீகம். மழையினைப் பெறும் முகமாகவும் நோய்நொடிகள் நீங்கும் பொருட்டும் இது ஆடப்படுகிறது. இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு நீர்வையூரில்

அரியரிபட்டர் என்பவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு ஒருக்காற் பேதிநோய் ஏற்பட்டது. கிராமம் முழுவதும் அந்நோயால் வருந்தியது. அவ்வேளை அவர் வாய்க்காற்தரவைப் பிள்ளையார், அரசகேசரிப்பிள்ளையார், இராஜராஜேஸ்வரி அம்மன் கோயில், அச்செழு அம்மன், மட்டுவில் பண்டித்தலைச்சி அம்மன், அங்கணமாக்கடவை அம்மன், வற்றாப்பளை அம்மன் போன்ற பல தெய்வங்கள் மீது வசந்தன் பாடல்களைப் பாடி வழிபாடு செய்தார். அதனால் பேதிநோயின் கெடுதி நீங்கியது என வழங்கும் கர்ணபரம்பரைக்கதை உண்டு. இன்று வரை அம்மை முதலிய தொற்றுநோய்கள் ஏற்பட்டால் வசந்தன் பாடல்கள் பாடி வசந்தன் அடிக்கும் வழக்கம் உண்டு. முத்துக்குமார ஆசாரிய சுவாமிகள் வேளாண்மைக்குரிய பயிர் வசந்தன், மேக வசந்தன், மழை வசந்தன் என்னும் மூன்று அங்கங்களையுடைய வசந்தன் பாடல்களைப் பாடி 1920ஆம் ஆண்டு நீர்வேலி ஸ்ரீஇராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் வசந்தன் அரங்கேற்றம் செய்தார்.

ஈழத்தமிழருக்குரிய வழிபாட்டுமுறைகள், பழக்கவழங்கங்கள், பண்பாட்டு விழுமியங்கள் என்பவற்றை வெளிப்படுத்தும் வகையில் நாட்டுக்கூத்து இவ்வூரில் ஆடப்பட்டு வருகின்றது. அரிச்சந்திரன் நாடகம், பவளக் கொடி, காத்தவராயன் கூத்து, கோவலன் நாடகம், சத்தியவான் சாவித்திரி, அல்லி அர்ச்சுனா, இராவணன் நாடகம், கர்ணன் நாடகம், சகுந்தலை நாடகம், ஏழுபிள்ளை நல்லதங்காள் நாடகம் என்பன சிறப்பிடம் பெறுகின்றன. இக்கூத்துக்கள் வாயிலாக இதிகாச புராணக் கதைகள், தெய்வத் திருவிளையாடல்கள் என்பவற்றைப் பாமரரும் அறிய முடிகின்றது. மேலும் காவடி, வில்லிசை, கும்மி, கோலாட்டம் நாட்டார் பாடல்கள் போன்றனவும் முதன்மை வகிக்கின்றன.

நீரோதிக் குடித்தல், பார்வை பார்த்தல், நூல் கட்டுதல், நாவுறு கழித்தல், கண்திருடி, சுபநாள், சுபநேரம் பார்த்தல், கலை சொல்லுதல் போன்ற பல்வேறு நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் இங்குள்ள மக்களால் கடைப்பிடிக்கப்படுகின்றன. மேலும் கோயிற்கிரியைகள், இல்லறக்கிரியைகள், விரதங்கள், பண்டிகைகள் என்பன நீர்வையின் இந்துப்பண்பாட்டினை செழுமைப்படுத்துகின்றன. சிவசங்கரபண்டிதர் போன்றவர்களால் ஆரம்பிக்கப்பட்ட புராணபடன மரபு இன்று வரை ஆலயங்களில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இவ்வகையில் நீர்வேலிக் கிராமம் இந்துப் பண்பாட்டு வளர்ச்சியின் நிலைக்களனாகத் திகழ்கிறது. இவ்வூர் இந்துப் பண்பாட்டு வளர்ச்சிக்கு இந்துக் கோயில்கள், சான்றோர் பெருமக்கள், நிறுவனங்களது பணிகள், தொன்று தொட்டு பேணப்படும் கலைமரபுகள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள், இந்துக் கிரியைகள், விரதங்கள், பண்டிகைகள், புராணபடன மரபு என்பன ஊன்றுகோலாக அமைகின்றன. இத்தகைய சிறப்பினையுடைய நீர்வேலியின் இந்துப் பண்பாட்டினைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நீர்வேலி வாழ் மக்களுக்கும் நீர்வேலியிலிருந்து புலம்பெயர்ந்து உலகெங்கினும் வாழும் மக்களுக்கும் உரியதொன்றாகும்.

செல்வி. சிவானதி செல்வநாயகம் B.A (Hons),
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

# Remedy'sRx Arogya Pharmacy

## 5200 FINCH AVE EAST #111, SCARBOROUGH, M1S 4Z4

# Remedy'sRx ஆரோக்யா பார்மசி

FINCH & MIDDLEFIELD சந்திப்பில்


**Tel: 416. 840. 0007    Fax: 416.840.0008**

**"நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"**

**- என்பது திருக்குறள்**

## தமிழர் மத்தியில் தமிழ் மருந்தாளரின் புதிய மருந்தகம்:
## Remedy'sRx ஆரோக்யா பார்மசி

- நீங்கள் உபயோகிக்கும் மருந்துகள், அவற்றின் செயற்பாடுகள் பற்றியும், உங்கள் ஆரோக்கியம் சம்பந்தமான விபரங்கள் பற்றியும்,தெளிவான விளக்கங்களை என்னுடன் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் கலந்துரையாடிப் பெற்றுக்கொள்ளலாம்.
- முதியோர் மற்றும் சமூகநல உதவியில் இருப்போரிடமிருந்து $ 2.00 அறவிடப்படமாட்டாது
- வயோதிபர்கள் மற்றும் உதவியற்றவர்கள் தாமே உபயோகிக்கும் வகையில் மருந்துகளை "COMPLIANCE or BLISTER PACKGING"செய்து கொடுக்கப்படும்.
- தங்களுக்குத் தேவையாயின் இலவச விநியோகமும் செய்து தருவோம்.
- மருந்தகத்தில் இரத்த அழுத்தம் சரிபார்க்கும் கருவியையும் இலவசமாக உபயோகிக்கலாம். (FREE BLOOD PRESSURE MONITOING)
- GLUCOMETER STRIPS வாங்கினால், GLUCOMETER இலவசமாக தருவோம். அத்துடன் உபயோகிக்கும் விதத்தினையும் தெளிவாக விளக்கிக் கூறுவோம்.
- மருந்துச் சீட்டின்றி பெற்றுக்கொள்ளக் கூடிய மருந்துகளை என்னுடன் தமிழில் கலந்தாலோசித்துப் பெற்றுக் கொள்ளலாம்..
- மருந்தக நேரம் முழுவதும் தமிழ் மருந்தாளரின் சேவைகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்:



**வெ. கார்த்திகேயன் (கார்த்திக்)**
**மருந்தாளர்**
(Pharmacist / Owner)
416-840-0007

விரைவான சேவை! நிறைவான சேவை!! தரமான சேவை!!!

## உங்கள் ஆரோக்கியமே எங்கள் நோக்கம்

# அதிசயங்கள் நிறைந்த அருள் வேலவன் ஆலயம்

பிரம்மஸ்ரீ.தி.மயூரகிரி சர்மா

நீர்வேலிக்கிராமம் பெரிதாக நவீனப்பட்டு விடாத காலம் அது… எங்கு நோக்கினும் செழிப்பும் வனப்பும் நிறைந்திருக்கிறது. விவசாயமே பெரும்பாலோரின் முக்கிய தொழில் ஆதலில், சூழல் விவசாயச் சூழலாக இருக்கிறது. எது எப்படி இருந்தாலும் அங்கிங்கெணாது எங்கும் குடி கொண்டிருக்கிற இறைவன் அந்த மக்கள் உள்ளம் தோறும் கோயில் கொண்டிருக்கிறார்.



அதற்கு அத்தாட்சியாக, நீர்வேலியில் முப்பெரும் கோயில்கள்.. ஆகப் பெரியனவாயில்லாத போதும், ஓரளவு சிறப்பாகவே அமைந்திருக்கின்றன. இது மட்டுமல்ல, பெருமரங்களின் அடிகளில் சூலமும் வேலும் கல்லும் சுந்தரமாக அமைக்கப்பெற்று அந்த ஆண்டவன் வழிபாடு நடக்கிறது.

ஆனாலும், ஸ்ரீலஸ்ரீ சிவசங்கரபண்டிதர், சிவப்பிரகாச பண்டிதர், நடராசபண்டிதர் மூவரும் தொடர்ந்து ஆற்றியிருக்கிற கல்விப்பணியால் மக்களில் பெரும்பாலோர் எழுத்தறிவு பெற்று விளங்குகிறார்கள்.. காலையில் எழுந்தால் ஆலயங்களின் காண்டாமணி ஓசை வேதபாராயணம், திருமுறை முழக்கம் இவைகள் இந்தக் கிராமத்திற்கு இயல்பாகவே அமைந்து விட்டன.

இற்றைக்கு சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்.. இந்நிலைமைகளோடு கூடிய நமது நீர்வேலிக்கிராமம் இருந்தது. இந்நிலையில் நீர்வேலியின் வடபகுதியில் குடிசை அமைத்துத் தன் குடும்பத்துடன் வாழ்ந்தவர் தான் செல்லாச்சி அம்மையார்.

சாதுவான குணம், சத்தியமான கடவுள் நம்பிக்கை, என்று இயல்பாக இருந்தவர். தொடர்ந்து வந்த துன்பங்கள் அவரைப் புடம் போட்டுத் தூயவராக்கி இருந்தன. இப்போதெல்லாம் பார்ப்பதெல்லாம்.. கடவுளும்.. கடவுளுக்காகவும்,

இப்படியே அவர் வீட்டுப் பலாமரம் அன்றைக்குத் தான் பிஞ்சு பிடித்திருந்தது.. இது கதிர்காமத்து ஷ வேற்பெருமானுக்கு.. அன்றைக்கே அது மனதில் அர்ப்பணிக்கப்பெற்று விட்டது.

ஆனால், ஓரிரு நாட்களில் பார்த்தால்.. அதிசயமாக பிஞ்சு காயாகி.. பழமாகி.. பறவைகள் கூடி உண்ணும் நிலையை பெற்று விட்டது. திடுக்கிட்ட அம்மையார் என் செய்வது என்று கலங்கினார். புகைவண்டி இல்லாத.. பஸ் பயணங்கள் இல்லாத அந்தக் காலத்தில் இப்பலாப்பழத்தைத் தூக்கிக் கொண்டு பல மைல்களுக்கு அப்பாலிருக்கிற தென் கதிர்காமம் செல்வது என்றால் எப்படி? இதற்கு எத்தனை மாதமாகும்..?

அவர் ஏதும் அறியாமல் திகைத்தார். பலாப்பழத்தை வெட்டி கைகளில் வைத்துக் கொண்டு அந்த சித்திரமயில் வாகனனை வள்ளி மணவாளனை.. செந்தமிழின் நாயகனை.. சிந்தித்துப் போற்றத் தொடங்கினார். சிறிது நேரத்தில் ஆளையே காணவில்லை.

ஓரிரு மணி நேரங்கள் கடந்தோடி விட்டன.. நீர் வடிகிற சேலை.. நீறணிந்த நெற்றி… தங்க வேலும் முருகயந்திரமும் மின்னும் வலக்கை.. கதிர்காமத்திலே நிவேதித்து, பிரசாதமாகக் எடுத்த பலாப்பழத்துண்டு இப்படியே வீட்டு முன்றலில் நிற்கிறார்.

எங்கு இவர் சென்றாரோ.. என்று ஏங்கியவர்களும் தேடியவர்களும் இவரைக் கண்டு வியக்கிறார்கள்.. என்ன நடந்தது..? எப்படி நடந்தது..? யார் நடத்தியது? என்று குழம்பி ஆச்சரியத்தில் ஆட்பட்டார்கள்.

இது வரை எந்தச் சித்தும் செய்யாமல் எம்மோர்டு இருந்தவர் தானே.. செல்லாச்சி அம்மை தானே .. ? என்று அஞ்சினார்கள்.. சிறிது நேரம் செல்ல அம்மையாரே வாய் திறந்தார். இறைவனே தம்மை தென் கதிரமலைக்குக் ஒரு நொடியில் கொண்டு சென்று மீள நீர்வேலியில் விட்டதாக.. வியந்து நயந்து கண்ணீர் சொரியக் கூறினார். அவர் கையில் மின்னுகிற வேலும் யந்திரமும் அவருக்கு கதிரமலையில் கிடைத்த அரிய பொக்கிஷங்கள் என்று தெள்ளத் தெளிவாயின.

ஆங்கிருந்த நெல்லிமர நீழலில்.. இறைவனின் உத்தரவுப்படி வேல்பிரதிஷ்டை நடந்தது. ஆம், நீர்வேலியில் ஒரு கதிர்காமம் உருவாகி விட்டது. இன்னும் சில நாட்கள் சென்றன.. கதிர்காமத்திலிருந்து வந்தவர்கள் ஓரிருவர் செல்லாச்சியம்மையைத் தேடி நீர்வேலிக்கு வந்தார்கள்.. உங்களை கதிர்காமத்தில் கண்டோமே..? என்றார்கள்.. ஊர் வியந்து போனது.. மாதக்கணக்கில் கால்நடையாகச் செல்ல வேண்டிய தென் கதிர்காமம் ஓரிரு மணித்துளிகளில் சென்று வருவதென்றால் என்ன அதிசயம்.?

ஔவையார், காரைக்காலம்மையார், செந்தமிழ்க் கோதையாம் ஆண்டாள், மீரா இவர்கள் வழியே அன்றே செல்லாச்சியம்மைதன் குடும்ப வாழ்வை நீத்தார்.. தவவாழ்வைக் கைக் கொண்டார்.

செல்லாச்சியம்மையின் பணிகளில் சின்னாச்சியம்மை என்கிறவரும் இணைந்து கொண்டார். இருவரும் குலத்தால்.. மரபால் வேறுபட்டவர்கள்.. ஆனால், பக்திக் குணத்தால் இங்கே நீர்வை செல்வக்கதிர்காமத்தில் ஒன்றானார்கள்.

காலங்கள் ஓடின.. நெல்லிமரநீழல் தெய்வீகமயமானது.. கறுத்த இருளில் அங்கு மட்டும் தீபம் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும். காற் சிலம்போசை மக்கள் கர்த்து ரட்சிக்கும்.. இப்படியே சென்ற வேளையில், பெருமானின் உத்தரவின் வண்ணம் இரு தபஸ்வினிகளும் ஊருராய்ச் சென்று மடிப்பிச்சை கேட்டார்கள்.. கிடைத்தவற்றை கொண்டு முருகனுக்கு வைரக்கல்லால் கோயிலமைக்கத் தொடங்கினார்கள்.

வியாபாரி ஐயா என்று ஊரவர்களால் அன்போடு போற்றப்பெற்றவர் பிரம்மஸ்ரீ.க.தியாகராஜக்குருக்கள். அரசகேசரியானின் சூழலில் வாழ்ந்த அவர் ஆகமம், இசை, ஜோதிடம், புராணபடனம், இவைகளில் ஒப்பாரும் மிக்காருமில்லாப் அறிஞர். அடக்கமும் அறிவும் மிக்கவரான அவர் இவ்விருதவச்செல்விகளின் பக்திமையைக் கண்டார். உரிய நிலைகளில் ஆகம முறைமைகளைக் காட்டி வழிப்படுத்தினார்.

இம்மூவரின் பங்களிப்பால் நீர்வேலி வடக்கில் வைரக்கற்களால் இழைக்கப்பெற்ற கருவறையுடன்.. அழகிய சிறிய அற்புத ஆலயம் உருவானது. 1936 ஆவணி மாதத்து ரேவதியில் கோயிலில் குமரன் குடியேறினான். குடமுழுக்கும் நடந்தது. அந்த மனநிறைவில் .. செல்லாச்சி அம்மையார் சிவப்பேறெய்தினார். அவர் தம் சமாதி கோயில் வீதியில் இன்றும் இருக்கிறது. கோயிற் பரிபாலனத்தையும் பூஜையையும் க.தியாகராஜக்குருக்களே சிறிது காலம் மேற் கொண்டார்.

குருக்களும் முதுமையால் தளர்வுற ஆலய பூஜை செய்பவர்கள் அடிகக்டி மாறிக் கொண்டேயிருந்தார்கள். கருவறையைத் திறந்தால் பாம்பு நடமாடும்.. கோயிலைச் சுற்றிலும் பனைமரக்காடு.. எங்கும் புதர்கள்.. மிகவும் பாடுபட்டு கோயிற் பராமரிப்பாளராக செல்லாச்சியம்மை நியமித்திருந்த திருமதி

இராசா வள்ளிப்பிள்ளையும் அவர் பிள்ளைகளும், அன்பர்களும் ஆலயத்தை ஒருவாறு பராமரித்து வந்தனர். அவர்களால் தொடர்ந்து அது முடியாமல் போயிற்று.

கோயிலைச்சுற்றி பனைமரக்காடு.. எங்கும் புதர்.. கோயில் முன்றலில் கிறிஸ்துவத்தை ஏற்றுக் கொண்டவர்களின் தொடர் குடியிருப்புக்கள்.. இப்படியான சூழலில்… கோயிற் கருவறையில் தீபமேற்றுவதே சவாலாக இருந்தது.. இக்காலத்தில் திருமதி இராசா குடும்பம், க.அப்பாத்துரை, இ.கந்தசாமி போன்றோர் பெருமான் ஆலயத்தில் தீபமேற்றும் திருப்பணியில் ஈடுபட்டுழைத்தனர்.

இப்படியான சூழலில், நீர்வை மணி பிரம்மஸ்ரீ. கு.தியாகராஜக்குருக்கள் கோயில் பூஜையை ஏற்றுக் கொண்டார்கள். அன்பர்கள் பலர் சேர்ந்து மாதாமாத பூஜை ஒழுங்குகளை ஏற்றார்கள். கோயிற் சூழல் புனரமைக்கப்பெற்றது. கருவறையின் மேலே விமானம் அமைக்கப்பெற்றது. வலஞ்சுழி விநாயகர் பிரகாரத்தில் வந்தமர்ந்தார். இந்நிலையில் சிறப்பாக, 1985 பங்குனி ரோகிணியில் மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

கோயிலைச் சுற்றியுள்ள பல்தொழில் சார் மக்களும் கோயிற் பணியில் பேதம் மறந்து பணியாற்றினர். கோயில் முன்றலில் வாழ்ந்த பிற சமயிகளும் தம் இருப்பிடங்களை விட்டுக் கொடுத்து .. கோயிலின் எழுச்சிக்கு உதவினர். இப்படி மேன்மையான நிலையை நோக்கி கோயில் எழுச்சியுற, விழாக்களும் வெகு சிறப்பாக நடைபெறலாயின..

1995ல் மீள பெரும் உள்நாட்டுப் போர் பிறந்தது. யாவரும் ஊரை விட்டு, உறவை விட்டு தென்மராட்சி நோக்கி ஓடவேண்டியதாயிற்று.. இந்த ஓட்டத்தின் சீர்கேட்ட சூழலில் கோயிற் சூழலே இருதரப்புக்களின் சமர்க்களமானது.. மூலத்தானத்து வேலும்.. இன்னும் பெருமானின் ஆபரணங்களும் கொள்ளையடிக்கப்பட்டன.. கோயில் மதிப்பிட முடியாத சேதத்திற்கு உட்பட்டது.

கு.தியாகராஜக்குருக்கள், ஸ்ரீமான் அமரர்.த.சின்னத்துரை, திருமதி இராசாகுடும்பம், என்று பற்பல அன்பர்களின் கூட்டு முயற்சியால், கோயில் அழிவுகளிலிருந்து மீட்டெடுக்கப்பெற்று 1997ல் வைகாசி புனர்பூச நாளில் திருக்குடமுழுக்குச் செய்யப்பெற்றது. 2001லிருந்து ஆனித்திங்களில் பிரம்மோத்ஸவமும் ஆரம்பமாகி நடைபெறும் இக்கோயிலில் 2003 மகாமகவருஷத்தில் “குமாரபுஷ்கரணி” திருக்குளமும் அமைக்கப்பெற்றது. சில ஸ்தலங்களில் முருகன் சிவரூபமாக விளங்குவான்.. இங்கோ, பெருமான் விஷ்ணுரூபமாக விளங்குகிறான். முருகனோடு.. மாயன் மாமன்.. திருமாலும் விளங்குகிற அழகை இங்கு காணலாம். கண்ணனும் கந்தனும் கலந்து “ஈழத்துப் பழமுதிர் சோலை”யாக இத்தலத்தில் சிறப்புற்றுக் காட்சி தரும் அழகே பேரழகாகும்.

சுந்தரவல்லி, அமிர்தவல்லித் தாயார்களுடன் உற்சவராகிய சுந்தரராஜன் எழுந்தருளும் அழகு இங்கு சிறப்பானது. ஆனி மஹோத்ஸவம், ஐப்பசி ஷஷ்டி விழா, ஆடித் திருவோணம், மார்கழி சுவர்க்கவாயில் ஏகாதசி என்று இங்கு சிறப்பான திருநாட்கள் அமைந்திருக்கின்றன.
நீங்களும் ஒருமுறை நீர்வேலி வாருங்கள்.. செல்வக்கதிர்காம வேலன் சந்நதியில் நின்று ஒரு கணம் போற்றுங்கள்.. நன்மையும் செல்வமும் அவன் அள்ளி வழங்குவான்..

பிரம்மஸ்ரீ.தி.மயூரகிரி சர்மா
நீர்வேலி


ONE STOP AUTO REPAIR AND COLLISION REPAIR CENTRE
Specialized in:
On call service
Neon light installation
Exhaust repair
Safety certification
Tune up
Oil spray to prevent rust
Power steering & brakes
Auto body work
Ultimate front end repair
Transmission rebuilding
Oil & filter change
Rebuilding engine
Electrical repair
Precise wheel balancing
Auto alarm
Innovative custom designed car stereo
Remote car starter
Happy Auto
ONE STOP AUTO REPAIR AND COLLISION REPAIR CENTRE
Tel: 416 757 7673
Fax: 416 757 9684
17 Civic road, unit # 1, Scarborough, Ontario, M1L 2K6
www.happyauto.ca
E-mail: happyauto@hotmail.com

Desjardins

**Desjardins Financial Services, DFS**

**Working together with you to Protect your Plans & Achieve your Financial Piece of Mind**

**சகலவிதமான காப்புறுதித் திட்டங்கள், சேமிப்புத் திட்டங்களை தகுந்த விளக்கங்களுடன் பெற்றுக்கொள்ள அழையுங்கள்**

**திவா விஜயானந்தன்**

*Income Tax Returns* *
*Savings and Investment Planning* *
*Education Planning, RESPs* *
*Retirement Planning, RRSPs* *
*Disability Insurance* *
*Mortgage Protection* *
*Non-Medical Coverage* *
*Travel Insurance* *
*Extended Health Care* *




Thiva Vijayananthan, BAS
Financial Consultant

BUS: 416-695-1433 X 259
RES: 416-725-2655

155 REXDALE BLVD #406
ETOBICOKE, ONTARIO, M9W 5Z8

# Neervely Welfare Association - Canada
# Competition Participants 2011


Karthik Balachandiran


Sharangah Murugaratnam



Sanjeev Balachandaran


Surabhi Anpalagan



Neera Kirubakaren


Kajeevan Sivathasan


Thaamera Niamalraj


Naveen Kirubakaren


Pairavai Murugaratnam


Aravin Selvarajh


Santhana Thevarajah


Athesa Nanthakumaran


Abirami Thevarajah


Meera Thavarajah


Kiyasan Nanthakumaran


Luxsa Nanthakumaran

# Neervely Welfare Association - Canada
# Competition Participants 2011


Kishore Karan



Sajan Prabakaran



Harsana Yogarajan



Mathanki Thavarajah


Rasana Yogarajan



Navashini.Kirupakaran


Sajeevan Sivathasan


Shagira Senthilnathan


Shabhanu Karan


Sinthu Anpalagan


Majuri Prabakaran




Zhuoku.com

# Neervely Welfare Association - Canada
# ANNUAL COMPETITION EXAM -2011













Zhuoku.com

GLOBAL

**GLOBAL RESP CORPORATION**
Approved Distributor of the Global Educational Trust Plan (Global Plan)




### It's closer than you think. Start saving for your child's education today.

You don't want to take unnecessary risks with your child's future. The Global Plan is an education savings plan that provides you a disciplined approach to saving for your child's education.

Investing a few dollars a week can make the difference of a lifetime to your child.

The Global Plan offers you tax-deferred growth as well as access to the Canada Education Savings Grant (up to $7,200) and Canada Learning Bond (up to $2,000)—that's **up to $9,200 per child** in government grants when registered.†

Combining many of the best features from other individual and group scholarship plans, the Global Plan offers **low-risk** investments, **pooled investing** for potentially higher returns, **choice** of colleges and universities worldwide, **professionally managed** investment portfolio, and many **flexible options** that make saving easier.

**Call now to learn more about the Global Plan** and how to save for your child's future education.

**Jeeva Gopalasingam**
Sales Representative
(416) 258-8289 or (416) 741-7377
jeevag@globalassociates.ca

The Global Plan is offer by Prospectus only.

GLOBAL RESP CORPORATION

† Eligible under section 146.1 of the Income Tax Act. Subject to meeting government requirements.

03355 (103111)

www.globalfinancial.ca

Every **dream** needs a **Plan**

# Neervely Welfare Association - Canada
# Annual Competition Exam – 2011
# Results

## Competition-Math

| | | |
|---|---|---|
| Grade 1: | 1st | Mathanki Thavarajah |
| | 2nd | Athesa Nanthakumaran |
| | 3rd | Rasana Yogarajan |
| Grade 2: | 1st | Karthik Balachandiran |
| | 2nd | Sinthu Anpalagan |
| | 3rd | Majuri Prabakaran |
| Grade 3: | 1st | Abirami Thevarajah |
| | 2nd | Meera Thavarajah |
| | 3rd | Thaamera Nimalraj |
| Grade 4: | 1st | Luxsa Nanthakumar |
| | 2nd | Aravin Selvarajah |
| | 3rd | Kishore Karan |
| Grade 5: | 1st | Kiyasan Nanthakumar |
| | 2nd | Sajan Prabakaran |
| | 3rd | Santhana Thevarajah |
| Grade 6: | 1st | Sharangah Arulanantham |
| | 2nd | Shagira Senthilnathan |
| | 3rd | Sajeevan Sivathasan |
| Grade 8: | 1st | Shabhanu Karan |

## Competition-Tamil

| | | |
|---|---|---|
| Primary Division: | 1st | Mathangi Thavarajah |
| | 2nd | Sinthu Anpalagan |
| | 3rd | Karthik Balachandiran |
| Junior Division: | 1st | Meera Thavarajah |
| | 2nd | Santhana Thevarajah |
| | 3rd | Aravin Selvarajh |
| Intermediate Division: | 1st | Sharangah Arulanantham |
| | 2nd | Sajeevan Sivathasan |
| | 3rd | Shagira Senthilnathan |
| Upper Division: | 1st | Shabhanu Karan |

## Competition-Spelling Bee

| | | |
|---|---|---|
| Primary Division: | 1st | Abirami Thevarajah |
| | 2nd | Karthik Balachandiran |
| | 3rd | Kajeevan Sivathasan |
| Junior Division: | 1st | Sharangah Arulanantham |
| | 2nd | Sajeevan Sivathasan |
| | 3rd | Kiyasan Nanthakumar |
| Intermediate Division: | 1st | Shabhanu Karan |

Duty is ours! Success is Yours


# ஒன்ராறியோ நுண்கலைக் கூடம்
# Ontario Academy of Fine Arts

## 1ம் வகுப்பு தொடக்கம் பல்கலைக்கழகம் வரை

அதிபர் பொ. கனகசபாபதி அவர்களின் நிர்வாகத்தில்

ஒன்ராறியோ பாடத்திட்டத்திற்கமைய தராதரம் பெற்ற ஆசிரியர்களினால் கலையுடன் கல்வியும் இணைத்து நடாத்தப்படுகின்றது.

**1ம் வகுப்பு தொடக்கம் பல்கலைக்கழகம் வரை**



**Ontario Academy of Fine Arts**

- Vocal
- Veena
- Flute
- Violin
- Ghatam
- Mrudhangam
- Tabla
- Bharathanatyam
- Keyboarding
- Piano
- Guitar
- Drum

**Ontario Academy of Science**

- Math
- Science
- English(E.S.L)
- English(Regular)
- Physics
- Biology
- Chemistry
- Accounting

**Summer Camp**
**Full Time**
**July - August**
**Grade 1 Grade 8**


மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
**சங்கர்** அல்லது **மோகனன்**

**FOR MORE INFO, PLEASE CALL 416-609-8314 / 647-403-8314**
**880 ELLESMERE ROAD, #203B, SCARBOROUGH, ON. M1P 2W6**
**WWW.OAFA96.COM E-MAIL: oafa96@gmail.com**


Thermo Care
A-Z
DUCT CLEANING
Vicky
Cell: 416.509.0937
Improves Air Quality
Cleans Bacteria & Viruses
Allergy & Asthma Relief
Reduces Dust Build-Up
Increases Airflow
Decrease Your Utility Bill
• Furnace Cleaning
• Dryer & Vent Cleaning
• Electronic Air Cleaners

# Energy Carpet Cleaning INC

**13 Years Experience in Related Fields**



- Carpet Shampoo & Steam Cleaning
- Pressure Washer
- Building Maintenance
- Jaintorial Cleaning
- Strip & Wax
- Emergency Flood Cleaning
- Commercial & Industrial Cleaning
- Truck Mount

## முதன் முதலாக தமிழன் ஒருவரால்

- புதிய தொழில்நுட்பத்தின் மூலம் உங்கள் மின்சாரத்தையும் சுடுநீரையும் மிச்சப்படுத்தி, அனைத்து வேலைகளையும் எமது வாகனத்தில் இருந்து செய்கிறோம்,


**Kugan : 416 525 4288**

Email: energycarpetcleaning@hotmail.com
www.energycarpetcleaning.com

24 Hrs / 7 Days a week




39 Guinevera Road, Markham On. L3S 4V3



அபிநயாலயா நாட்டியாலயம்
Abinayalaya Natyalayam
Academy of Indian Classcial Dance
ஆசிரியை ஆடல்கலைமணி
ஸ்ரீமதி. ரஜனி செல்வப்பிரகாசம்
வகுப்புகள் நடைபெறும் இடங்கள்
Markham and Painted post,
Markham and Steels & Ajex.
Abinayalaya Natyalayam
Smt Rajani Selvapragasam
416- 320- 2913

# வாழையடி வாழை 2011


NEERVELY WELFARE ASSOCIATION-CANADA
வாழையடி வாழை






CANADA


நீர்வேலி நலன்புரிச் சங்கம்-கனடா
NEERVELY WELFARE ASSOCIATION-CANADA
வாழையடி வாழை



# வீரர் ரேக் அவுட் & கேற்றரிங்

# VEERAR TAKE OUT & CATERING

## மாநகரில் மரக்கறி சாப்பாட்டின் மன்னர்

# வீரர்

## எமது புதிய வரவு:

பலவிதமான பாண்வகைகள்,பணீஸ் (Buns), கேக் வகைகள் and More!!!!



- **Birthday**
- **Anniversary Parties**
- **Wedding**
- **Puberty & All special Events**

**போன்ற நிகழ்வுகளின் கேற்றரிங் தேவைகளுக்கு உடனே அழையுங்கள் வீரர் ரேக் அவுட்&கேற்றரிங்**







## தொடர்புகளுக்கு-அப்பன்

## (647)293-6634 / (416)299-4541

**5790 Sheppard Avenue East., Unit-3**
**Scarborough, Ontario, M1B 5J7**

# Summer Get Together and Sports Event 2011

## கோடைகால ஒன்றுகூடலும் விளையாட்டு போட்டியும் - 2011













# Insurance & Investment Solutions

## PROTECT YOUR LOVED ONES NOW!!



**We Have Guaranteed Plans:**

- Life Insurance
- Segregated Funds from RBC
- Disability Insurance
- Critical Illness Insurance
- Mortgage Insurance
- Travel Insurance
- Auto Insurance & Home Insurance
- RESP AND RRSP
- Non-Medical Life Insurance
- Creditor Insurance



**Call Now To Get Your Best Rate Before It's Too Late!**

RBC Insurance

INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.

Desjardins

Assumption Life

BMO Insurance

**Arrange The Best Auto & Home Insurance Rates In The GTA!!!**




உறவுகளை மில்லியனர் ஆக்க
இன்றே தகுந்த ஆலோசனைகளை
பெற அழையுங்கள்...

Siva Mailvaganam
Broker
**Dir: 416-230-2991**
rajahsai@hotmail.com




## SpotTheDifference





### Find 4 Differences

### Find 4 Differences

## Problem Solving




**Bridge Crossing**

Instruction: Help all the people across the bridge remembering that their lantern only lasts for 30 minutes. Different people walk at different speeds and the bridge can hold a maximum of 2 people at a time so you will need to think of a good strategy to get everyone across in time.



**Wolf Sheep**


Instruction: The aim of the game is to move the wolf, sheep and cabbage to the opposite shore. It gets more difficult though because when the man is not around the wolf will eat the sheep, the sheep will also do the same when alone with the poor little cabbage.

**** Check the solutions on next Page




# SpotTheDifference - Solution





# Problem Solving - Solution

## Bridge Crossing

The main trick is to find a way to move the 2 slowest persons to the left together to save time

Step 1: First, move the 1 and 3 minute persons to the left
Step 2: Move the 1 person back to the right
Step3: Move the 8 and 12 minute persons to the left
Step 4: Move the 3 minute person back to the right
Step 5: Move the 1 and 6 minute persons to the left
Step 6: Move the 1 minute person to the right
Step 7:Move the 1 and 3 minute persons to the left

## Wolf Sheep

Step1: Move the sheep to the left
Step2: Move the wolf to the left
Step3: Move the sheep back to the right
Step4: Move the cabbage to the left
Step5: Finally, move the sheep to the left




SASI
KUNARATNAM
RE/MAX
Vision Realty Inc., Brokerage
Independently Owned and Operated
MLS
MULTIPLE LISTING SERVICE
REALTOR
Sasi Kunaratnam
Real Estate Broker
www.futurecondo.ca
C 416-358-8638
P 416-321-2228
F 416-321-0002
2210 Markham Road Suite 1
Toronto, Ontario, M1B 5V6
homes@sasikunaratnam.com
www.SasiKunaratnam.com
Hall of Fame Award 2011
Platinum Club Award 2008
100% Club Award 2006 - 2011


# 5 STAR FLOORING KITCHEN & BATH




- HARDWOOD
- LAMINATING
- TILES
- STAIRS
- KITCHEN
- WASHROOM
- VANITY
- AND MUCH MORE

Please call us at any time and We would be happy to arrange for a FREE no obligation quote for Hardwood Floors or Kitchen & bath.

**Sutha: (416) 418-3485 or Ram: (416) 616-9181**


Fashion &
Fancy House
Wide Selections of:
Kanjipuram Silk Sarees
Ladies Fancy Sarees
Bridal Sarees
Ceremonial Sarees
Adults and Children Suits
Tel: 416.492.9416 | 647.688.9416


Saranka
Jewllery
55 Sea street, Colombo 11
Tel: 243 4971
BALASARANKA
JEWELLERY
Tel: 416.412.3033
3351 Markham Road
Unit A117(Read Building)
Scarborough, Ontario. M1X 0A6
Money Transfer Services


Optimart
23 வருடங்களுக்கு மேலாக. உங்கள் சேவையில்
கண்பரிசோதனை
EYE EXAM
ஒரு மணிநேரத்தில்
கண் வைத்தியரைச் சந்தித்து
உங்கள் கண்ணாடியைப்
பொற்றுக்கொள்ளலாம்
உங்கள் கண்ணின்
நிறங்களை மாற்றக்கூடிய
விழி வில்லைகளை
நியாயமான விலைக்குப்
பெற்றுக் கொள்ளலாம்
கண் பதிசோதனை நிபுணரினால்
கண் பரிசோதிக்கப்படும்
Served by Licensed Opticians
தமிழ் மக்களின் நன்மை கருதி
தமிழர் நிர்வாகத்தில்
மூன்று இடங்களில்
சேவையாற்றுகிறார்கள்
Direct Billing Insurance Companies:
Green Shield
Great West Life
Mon-Fri 10am- 8 pm
Sat 10 am - 5pm
Sunday 12 pm- 4 pm
Markham / Eglinton
Markham / Steeles
416-266-3389
3150 Eglinton Ave.E.#6
(Eglinton & Markham)
Scarborough, ON. M1J 2H2
416-297-9903
3351 Markham Road
(Markham & Steeles)
Toronto, ON.M1X 0A6
416-690-4649
294 Main St.(@Danforth)
#2, Professional BIDg
Toronto, ON. M4c 4X5
Oprimart
Eglinton Ave.
Markham Rd.
Steeles Ave.
Markham Rd.
Oprimart
Danforth Rd.
Main Street
Oprimart

# IDEAL Flooring Centre
## KITCHENS & BATHS

Tel: 905.201.6900
Fax: 905.201.5969
www.myideal.ca

என்றும் நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம்...





உங்கள் இல்லங்களின் சமையலறை, குளியலறை மற்றும் வியாபார நிலையங்களை அழகுபடுத்திட எம்மை நாடுங்கள்.



**WE DO: FLOORING**
- Hardwood & Carpet
- Laminate & Tile
- Granite & Marble

**WE DO CUSTOM:**
- Staircase
- Kitchens
- Bathrooms

Quality *Guarantied!*



மக்களுக்கு மிகவும் அறிமுகமான கிருபாவின் நிர்வாகத்தில்

**7200 Markham Rd, Unit 02**
**Markham ON L3S 3R7**
*(Markham & Denison)*

Kiruba Mahendran
*Owner & Operator*
Cel: 416.937.8009
kiruba@myideal.ca

GLORIOUS PRINTERS & VIDEO INC. 905.471.2500

# தமிழ் கவிதை

## நான் நானே தான்

காலத்தை வீணாக்கி காதலியைத்,
தேடியவனும் நானே!

தேவதை உன்னை தரிசித்தவுடன் என்னை,
தொலைத்தவனும் நானே!

உன் குரல் கேட்டு குயிலின் இனிமையை,
மறந்தவனும் நானே!

உன் இதழ்களின் மலர்வை பார்த்து,
சொக்கி நின்றவனும் நானே!

உன் நளினப் பேச்சில் என்னை,
மறந்தனும் நானே!

